JUDICIAL FORM NO.53

(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW- - Pw-6 Witness
for Prosecution

| CC.No. | 89/2024 | Crime No. | | Station | Bhavani |
|---|---|---|---|---|---|

| Name | Pw.6 Dr. பூர்ண சந்திரிகா | Village |
|---|---|---|
| Father's Name/Husband's Name | | Taluk |
| Age | | Calling |
| The Oath was administered to the witness by Tmt.K.Sivakami, Bench Clerk and was solemnly affirmed by the witness in accordance with the provisions of Oaths Act of 1969 on 10.03.2026 | | |

**எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை–**

நான் தற்போது பவானி அரசு மருத்துவமனையில் முதுநிலை உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். நான் மேற்படி மருத்துவமனையில் கடந்த 10.04.2024–ம் தேதியன்று மதியம் சுமார் 01.10 மணியளவில் மருத்துவ அலுவலில் இருந்தபோது பவானி காடப்பநல்லூரைச் சேர்ந்த சக்திவேல் என்பவர் அவரது மனைவி வசந்தா என்பவரைச் சிகிச்சைக்காக அழைத்து வந்தார். வசந்தாவை விசாரித்த போது அன்று பகல் சுமார் 11.00 மணியளவில் தனக்கு தெரிந்த இரண்டு ஆண்களும் ஒரு பெண்ணும் தன்னை சேவகவுண்டன் கொட்டை அருகில் வைத்து கழுத்து மற்றும் கையில் அடித்ததாக கூறினார். அவரை பரிசோதித்த போது அவருக்கு கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டது.

1. இடது மேல்கையில் சிராய்ப்பு காயம் காணப்பட்டது.

2.கழுத்தில் வலி இருப்பதாக கூறினார்.

அவரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்தேன். மூன்று நாட்கள் உள்நோயாளியாக தங்கி இருந்து சிகிச்சை பெற்றுக் கொண்டார். அவருக்கு கழுத்தில் எக்ஸ்ரே எடுக்கப்பட்டது. அதில் எவ்வித எலும்பு முறிவும் காணப்படவில்லை. அதனால் அவருக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயம் எனச் சான்று வழங்கினேன்.

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.03.10 18:31:19 +0530

விபத்து பதிவேற்றுடன் கூடிய காயச் சான்று அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. புலன் விசாரணை அதிகாரி வழக்கு தொடர்பாக என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.**

நான் முதல் விசாரணையில் சொன்ன காயங்கள் அனைத்தும் ஒரு நபர் தடுக்கி கீழே விழுந்தால் ஏற்படக்கூடும் என்றால், சரிதான்.

**மறு விசாரணை இல்லை.**

Signature of Witness

Taken down before me in open court
readover to the witness in the presence
of the accused pleads and admitted by
him/her to be correct

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.03.10 18:31:27 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani